Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 24, 2025

திங்கட்கிழமை 24, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 185 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## பரீட்சை காலங்களிலும் அலறும் ஒலிபெருக்கிகள்

**பு.கஜிந்தன்**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை ஆரம்பித்த நாள் முதல் ஆறு நாட்களாக, யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிரான்பற்று வைரவர் ஆலய ஒலிபெருக்கிகளின் சத்தத்தால், பரீட்சார்த்திகளும் பொதுமக்களும் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக அன்றைய பாடத்தினை இறுதி மீட்டல் செய்யும் நேரமான காலை 6.15 மணி தொடக்கம் ஒலிபெருக்கிமூலம் ஒலிபெருக்கியின் விளம்பரம் என்ற பெயரில் மக்களால் சகிக்கமுடியாத மன உளைச்சலை ஏற்படுத்தக்கூடிய ஒலியெழுப்பப்படுவதால் மக்களும் மாணவர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## ரணிலுக்கு பிறந்தநாள்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க, தனது 76ஆவது அகவையில், மார்ச் 24ஆம் திகதியன்று காலடியெடுத்து வைக்கின்றார்.

இந்நிலையில், இலங்கைக்கான சீன தூதுவராலயம், ரணிலின் பிறந்தநாளையொட்டி, அவருக்கு முன்கூட்டியே இரா விருந்துபசாரம் அளித்துள்ளது.

இதன்போது, ரணில் விக்ரமசிங்கவின் மனைவி பேராசிரியை மைத்திரி விக்மசிங்கவும் பங்கேற்றிருந்தார்.

### திஸ்ஸ விகாரையில் புதிய கட்டிடம் திறப்பு:



# மக்கள் எதிர்ப்பு

**நிதர்ஷன் வினோத்**

பல்வேறு சர்ச்சைகளை தோற்றுவித்திருக்கும், தையிட்டி - திஸ்ஸ விகாரை பகுதியில் இராணுவத்தின் முழு முயற்சியுடன் மற்றொரு சட்டவிரோத கட்டிடம் ஞாயிற்றுக்கிழமை (23) காலை திறந்து வைக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தையிட்டி காணி உரிமையாளர்கள், அரசியல் தரப்புக்கள், பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

திஸ்ஸ விகாரை பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டு பிரச்சனை நிவர்த்தி செய்யப்படும் என்று புத்தசாசன அமைச்சர் சுனில் செனவி அறிவித்திருந்த நிலையில், அங்கு அமைக்கப்பட்டுள்ள மற்றொரு சட்டவிரோதக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்கு மேலதிகமாக, அந்தப் பகுதியில் மிக இரகசியமான வகையில் வேறுசில சட்டவிரோத கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வந்தன. இராணுவத்தினர் இந்தப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.

இது தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளியான நிலையில் அதற்கு பதில் மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் மறுப்புத் தெரிவித்திருந்தார். “தான் சம்பவ இடத்தை பார்வையிட்டதாகவும், அவ்வாறான சட்டவிரோத கட்டிடங்கள் எவையும் இல்லை” என்றும் அவர் கூறியிருந்தார்.

ஆனால், இராணுவத்தால் அமைக்கப்பட்டு வந்த அந்த சட்டவிரோத பௌத்த ஆக்கிரமிப்புக் கட்டிடங்களே மத வழிபாடுகளுக்குப் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (23) கையளிக்கப்பட்டன. அந்தக் கட்டடங்கள் பிக்குகள் தங்குவதற்காக மடாலயமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரையில் தொடர்ச்சியாக கட்டிடங்கள் அமைக்கப்படுவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கையாலாகாத தன்மையை வெளிப்படுத்துவதாக பலரும் விமர்சித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தையே தடுத்து நிறுத்துவதற்கு திராணியற்ற இந்த அரசாங்கம், எவ்வாறு திஸ்ஸ விகாரையை அப்புறப்படுத்தி, மக்களின் காணிகளை மக்களுக்கு உரியதாக்கும் என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டுள்ளன.



## இலங்கையில் விந்தணு வங்கி

இலங்கையில் முதல் விந்தணு வங்கி கொழும்பு, காசல் மகப்பேற்று மருத்துவமனையில் நிறுவப்பட்டதாக மருத்துவமனையின் பணிப்பாளர் டாக்டர் அஜித் தண்டநாராயணா தெரிவித்தார்.

குழந்தை பேறு இல்லாத பெண்கள், குழந்தைகளைப் பெறுவதற்குத் தேவையான விந்தணுவை இந்த விந்தணு வங்கி மூலம் பெற முடியும் அதன்போது, மிகவும் இரகசியமாகவும் தனியுரிமையைப் பாதுகாக்கும் வகையிலும் விந்தணுவை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். விந்தணு வங்கிக்கு ஆண்கள் விந்தணுவை தானம் செய் முடியும் என்றும், அதற்காக ஒரு சில சோதனைகளை மட்டுமே எதிர்கொள்ள வேண்டும் என்றும் கூறப்படுகிறது. விந்தணுவை யார் பெற்றார்கள், யார் கொடுத்தார்கள் என்பதை யாரும் அறிய வாய்ப்பில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

தொடர்ச்சி P2

### 82 நாட்களில்

## 27 துப்பாக்கிச்சூடு: 22 பேர் பலி

2025ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து மார்ச் 23 ஆம் திகதி வரையிலான 82 நாட்களில், நாடளாவிய ரீதில் பல பிரதேசங்களில் 27 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றின் விளைவாக 22 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். வெலிகம, அஹுங்கல்ல, தெவிநுவர, கல்கிஸ்ஸ, தொடங்கொட, மன்னார், அம்பலாந்தோட்டை, காலி, கொட்டாஞ்சேனை, மினுவங்கொடை, மித்தெனிய, ஜா-எல, கம்பஹா, வெலிவேரிய, மிதிகம, அம்பலாங்கொட, தெவுந்தர உள்ளிட்ட பல பொலிஸ் பிரிவுகளில் இந்த 27 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தொடர்ச்சி P2



## மரத்திலிருந்து சிலர் திசைக்காட்டிக்கு தாவினர்

**ஜவ்பர்கான்**

மட்டக்களப்பு - மண்முனைபற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் மண்முனை பற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளருமான ஏ.ஏ.மதீன் தலைமையிலான ஆதரவாளர்கள் முக்கிய செயற்பாட்டாளர்கள் தேசிய மக்கள் சக்தியோடு சனிக்கிழமை(22) இணைந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மண்முனை பற்று அமைப்பாளர் மதீன் தலைமையில் காங்கேயனோடை கிராம அபிவிருத்தி அமைப்பு சங்க மண்டபத்தில் மேற்படி வைபவம் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2




## இரட்டை படுகொலை: யுவதியுடன் மூவர் கைது

மாத்தறை, தெய்வேந்திரமுனை ஸ்ரீ விஷ்ணு கோவிலுக்கு அருகில் வேனில் பயணித்த இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது, வெள்ளிக்கிழமை (22) இரவு 11.45 மணியளவில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், தெய்வேந்திரமுனையைச் சேர்ந்த 28, 29 வயதான இருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

மிகவேகமாக பயணித்த வேன், மோட்டார் சைக்கிளிலை முட்டித்தள்ளிவிட்டு. அவர்கள் இருவர் மீதும் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு, தாம் வந்த வாகனத்தைக் கந்தர பொலிஸ் பிரிவிலுள்ள லேல்மடம் பிரதேசத்தில் நிறுத்தி தீ வைத்துக் கொளுத்தி விட்டு அங்கியிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 23 வயதான பெண்ணொருவர், 46 வயதான ஆண்கள் மூவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் கந்தர மற்றும் தெய்வேந்திரமுனையைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார்குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## கருணா–பிள்ளையான் மீண்டும் இணைந்தனர்

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட ‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ புதிய கூட்டமைப்பில் முன்னாள் பிரதி அமைச்சரான கருணா அம்மான் என்றழைக்கப்படும் வீ.முரளீதரன், பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் சனிக்கிழமை (22) கைச்சாத்திடப்பட்டது.

பாராளுமன்ற தேர்தலில் பின்னடைவைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்குவதற்காக புதிய முயற்சி முன்னெடுக்கப்பட்டு, ‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ உருவாக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

### திசைகாட்டி அரசாங்கம்

## “திக்குத் தெரியாது தடுமாறுகிறது”



நாட்டை ஆளும் மக்கள் விடுதலை முன்னணியினர் வரலாறு முழுவதும் பாட்டாளி வர்க்கத்தையே பிரதிநிதித்துவப்படுத்தி வந்தனர். நாட்டை அழித்தது முதலாளித்துவ வர்க்கமே என்று இவர்கள் தொடர்ச்சியாகக் கூறி வந்தனர். ஆனால், முதலாளித்துவ வர்க்கம் என்று சொல்லப்பட்ட அரசாங்கங்கள் மக்களுக்கு நல்லதையே செய்துள்ளன. அவ்வாறு செய்த நல்லனவற்றைக் கூட இவர்கள் குறை கூறித் திரிகின்றனர். தெளிவான அதிகாரம் கிடைத்தும் இன்று இவர்களால் எதையுமே செய்ய முடியாது புலம்பிக் கொண்டிருக்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

முதலாளித்துவ வர்க்க அரசு நியாயமான விலையில் அரிசியைப் பெற்றுக் கொடுக்கும் போது, உழைக்கும் வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திசைகாட்டி அரசு 100 ரூபாய்க்கு மேலான விலையில் இன்று அரிசியை விற்பனை செய்து வருகிறது.

தொடர்ச்சி P2




## “ஈழ அகதிகள் திரும்ப வேண்டும்”

**பு.கஜிந்தன்**

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் இலங்கைக்குத் திரும்பவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு நாடு திரும்புபவர்களுக்கான உதவிகளை வழங்குவதுடன், ஈழ அகதிகள் நாடு திரும்புவது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கும் உரியத் தரப்புக்களிடம் கோரிக்கை முன்வைக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சனிக்கிழமை (22) விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "ஈழ அகதிகள் திரும்ப வேண்டும்"

இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ஒபர் சிலோன் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இது ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவரவேண்டும் என போர் முடிந்ததிலிருந்து சொல்லப்பட்டு வருகின்றது என்பதையும், அவர்கள் மீண்டும் இங்கு வரவேண்டும் என்பதே இங்குள்ள எல்லோரது விருப்பம் என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த காலங்களில் இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்த ஒவ்வொருவர் தொடர்பான விவரங்களையும் பெற்று அவர்களுக்கு எத்தகைய தேவைப்பாடுகள் இன்னமும் இருக்கின்றன என்பதை அறிந்து அதனை உடனடியாக பூர்த்திசெய்யவேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

ஒபர் சிலோன் நிறுவனத்தின் திட்டத் தலைவர் செல்வி சின்னதம்பி சூரியகுமாரி, தமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும், எதிர்பார்ப்புத் தொடர்பிலும் விவரித்தார். இலங்கையிலிருந்து 4 கட்டங்களாக இந்தியாவுக்கு 334,797 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர் என்றும் தற்போது தமிழகத்தில் 103 முகாம்களில் 58,104 பேர் இருக்கின்றனர் என்ற தரவுகளையும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் தெரியப்படுத்தினர். தற்போது தமிழகத்தில் முகாம்களிலுள்ள 58,104 பேரில், 50,620 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டனர்.

2009ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு மாகாணத்துக்கு 14,531பேர் வருகை தந்துள்ளனர் என்றும் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினர்.

தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்புவதற்கு நிலையான கட்டமைப்பு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் என்றும், இலங்கை, இந்திய அரசாங்கங்கள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை தேவை என்றும், இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு அவசியம் எனவும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர்.

மேலும் தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளுக்கு இலங்கை மற்றும் வடக்கு மாகாணம் தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட அல்லது போலியான தகவல்கள் வழங்கப்படுகின்றமையும் அவர்கள் நாடு திரும்புவதற்குச் சவாலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நாடு திரும்பிய ஈழ அகதிகள் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்றும், இலங்கைக்கு நாடு திரும்புபவர்கள் இங்கிருந்து சென்றவர்களின் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையினர் என்பதால், இலங்கையில் அவர்களது பூர்வீக பிரதேசத்தை அடையாளம் காண்பதிலும், அவர்களின் காணிகளைக் கண்டறிவதிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்ற விடயமும் ஆளுநரின் கவனத்துக்கு ஒபர் சிலோன் நிறுவனத்தால் கொண்டு வரப்பட்டது.

கொள்கை ரீதியான ஆவணம் ஒன்றை ஒபர் சிலோன் நிறுவனம் தயாரித்து வழங்கிய பின்னர் அதனை அடிப்படையாக வைத்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

நாடு திரும்ப விருப்பமானவர்களின் பட்டியலை ஒபர் சிலோன் நிறுவனம், வடக்கின் 5 மாவட்டச் செயலர்களுக்கு வழங்கிய பின்னர் அவர்களுக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள் மேற்கொள்வார்கள் என ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளில் பலர் தாதியர் கற்கைநெறியை முடித்தவர்கள் எனவும், விளையாட்டுத்துறையில் சாதித்தவர்கள் எனவும் சுட்டிக்காட்டிய ஒபர் சிலோன் நிறுவனத்தினர், வடக்கு மாகாணத்தின் சொத்தான அவர்களை இழக்கக் கூடாது எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

தமிழகத்திலிருப்பவர்களை வலுக்கட்டாயமாக நாட்டுக்கு அழைத்துவரமுடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், வரவுள்ளவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கத் திட்டமிடுமாறும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஒபர் சிலோன் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், மேலதிக மாவட்டச் செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், சமுர்த்திப் பணிப்பாளர்கள், மாவட்டப் பதிவாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# "திக்குத் தெரியாது தடுமாறுகிறது"

நாட்டை அழித்ததாக சொல்லப்படும் அரசாங்கங்கள் நியாயமான விலையில் தேங்காயை விற்கும் போது, உழைக்கும் வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக சொல்லப்படும் திசைகாட்டி இன்று 100 ரூபாய்க்கும் அதிகமான விலையில் தேங்காயை விற்பனை செய்து வருகிறது. முதலாளித்துவ வர்க்க அரசாங்கங்கள் அவ்வப்போது உரிய நேரத்துக்கு உர மானியங்களை வழங்கி வந்தன. ஆனால், அறுவடை முடிந்ததுமே இந்த திசைகாட்டி அரசாங்கம் உர மானியத்தை வழங்கி வருகிறது. இந்த அரசாங்கத்தால் உரிய நேரத்துக்கு உரத்தைக் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர்களுடன் ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது, பல்லாயிரக்கணக்கான வேலையில்லாப் பட்டதாரிகள் இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு ஆதரவளித்தனர். ஆனால், இன்று வேலையில்லாப் பட்டதாரிகள் கூட கவனிப்பார் அற்ற நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளுக்குக் கண்ணீர்ப் புகை பிரயோகம், தடியடி மற்றும் அரச பயங்கரவாத தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன. பட்டதாரிகள் போராட்ட இடத்திலிருந்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பாட்டாளி வர்க்கத்திற்காகக் குரல் எழுப்பி ஆட்சிக்கு வந்த திசைகாட்டி, முதலாளித்துவத்தைப் பிரதியெடுத்து, சாதாரண மக்களை மறந்து, பாட்டாளி வர்க்கத்தை மறந்து செயல்பட்டு வருகிறது.

இந்த அரசாங்கம் முதல் இரண்டு மாதங்களிலேயே மக்களை ஏமாற்றி விட்டது. 6 மாத இறுதியில் இவர்களின் பொய்யையும் ஏமாற்றுதலையும் மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு ஒரு வருடம் கடக்கும் போது மக்களுக்கு இதைவிடவும் உண்மை நிலை புரிய வரும். உண்மை எவ்வளவு விரும்பத்தகாததாக இருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி உண்மைக்காக, மக்களுக்காக, மக்களின் உரிமைக்காக என்றும் முன்னிற்கும். நாட்டு மக்களைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

வேறு வடிவிலான பாதாள உலக நடவடிக்கைகள் தலைதூக்க தற்போதைய அரசாங்கம் இடமளித்துள்ளது. பாதாள உலகத்தின் வேர்களை, துப்பாக்கி தாரிகளின் கடத்தல் கலாச்சாரத்தை, கொலைக் கலாசாரத்தை மர்மமான முறையில் முன்னெடுத்துச் செல்லும் கலாசாரத்தை மக்கள் விடுதலை முன்னணியின் தேசபக்தி இயக்கம்தான் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது. மக்கள் விடுதலை முன்னணியினர் தான் துப்பாக்கி அரசியலை, துப்பாக்கி வன்முறை கலாச்சாரத்தை நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்கள். இதனை நாட்டு மக்கள் ஒருபோதும் மறந்து விட மாட்டார்கள். பொது மக்களுக்கான மறுமலர்ச்சி எப்படிப் போனாலும் பாதாள உலகத்திற்கு புதிய மறுமலர்ச்சி யுகம் திசைகாட்டி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

தீவிர முதலாளித்துவத்தில் இருந்தும், தீவிர சோசலிசக் கொள்கையில் இருந்தும் விலகி மனிதாபிமான முதலாளித்துவத்தை மையமாகக் கொண்ட நடுத்தர பாதையில் பயணிப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாகும். குரோனி முதலாளித்துவ கொள்கைகளை நாம் பின்பற்ற மாட்டோம். மனிதாபிமான முதலாளித்துவத்தின் மூலம் செல்வத்தை உருவாக்கி, சமூக நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் செல்வத்தைப் பகிர்ந்தளிக்கும் நடைமுறையை ஐக்கிய மக்கள் சக்தி நம்புகிறது.

சோசலிச கொள்கைகளைப் பின்பற்றியும் நடைமுறைப்படுத்தியும் தற்போதைய உலக ஒழுங்கில் ஒரு நாட்டை கட்டியெழுப்ப முடியாது. கம்யூனிஸ நாடுகள் என கூறப்படும் சீனாவும் ரஷ்யாவும் கூட இன்று முதலாளித்துவத்தையே கடைப்பிடிக்கின்றன.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் முந்தைய அரசாங்கம் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப வைப்பு நிதிகளின் மீதே அதிக அழுத்தத்தைக் கொடுத்தது. வங்கிக் கட்டமைப்புக்கும், கோடீஸ்வரர்களுக்கும் சலுகைகளை வழங்கி, அவர்களை பாதுகாத்து, உழைக்கும் மக்களுக்கு அழுத்தம் கொடுத்தபோது, ஐக்கிய மக்கள் சக்தியே அதற்கு எதிர்ப்பை தெரிவித்தது.

இந்த லும்பன் வர்க்க முதலாளித்துவத்துக்கு எம்மிடம் இடமில்லை. நாம் அதை எதிர்க்கிறோம். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை அரசாங்கத்தின் தலையீட்டினால் மட்டுமே தீர்க்க முடியும் என்று சோசலிசம் நம்பினாலும் அது பொய்யாகும். வடகொரியா கியூபா போன்று மாற வேண்டும் என்றால் இந்த கொள்கை சரி, ஆனால், சிங்கப்பூர் போன்ற நாடாக மாற வேண்டும் என்றால் இந்த முறை ஏற்புடையதல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

# இரட்டை படுகொலை: யுவதியுடன் மூவர் கைது

இந்த இரட்டை படுகொலை, 5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தத்தின் பேரில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என கந்தர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரட்டை படுகொலை, துபாயில் தற்போது தலைமறைவாக இருக்கும் பேல் மல்லி என்ற ஒரு திட்டமிட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரால் திட்டமிட்டுச் செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# மரத்திலிருந்து சிலர் திசைக்காட்டிக்கு தாவினர்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மண்முனை பற்றில் அரசாங்கத்தைப் பலப்படுத்தி உள்ளூராட்சி மன்ற அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த இணைவு நடைபெற்றது.

மேற்படி வைபவத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் எம். அப்துல்லா, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் யூ.எல்.எம்.என்.முபீன், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.எம்.ஏ.நசீர். காத்தான்குடி நகர சபை தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களான பொறியியலாளர் பலுலுல் ஹக், எம்.நஜிம் மற்றும் எம் எம்.றம்ஸி உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.



மண்முனை பற்று பிரதேசம் சார்ந்து எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய பல்வேறு வேலைத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது இங்கு முக்கிய அம்சமாகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சின்னம் மரம் என்பதும், தேசிய மக்கள் சக்தியின் சின்னம், திசைக்காட்டி என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

# கருணா- பிள்ளையான் மீண்டும் இணைந்தனர்

அதில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினரும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு ஒப்பந்தம் 15 ம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் இணைந்து களமிறங்கியுள்ளனர். கிழக்கு தமிழர் கூட்டமைப்புடன் கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியும் இணைந்துள்ளது.

# பரீட்சை காலங்களிலும் அலறும் ஒலிபெருக்கிகள்

யாழ். மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையப் பரீட்சை காலங்களில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தமுடியாது என கூறப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், அம் மகிழ்ச்சி நீடிக்கவில்லை பல இடங்களில் இக்கட்டுப்பாடுகள் பின்பற்றப்படவில்லை.

பரீட்சை தவிர்ந்த காலங்களிலும் ஆகக் கூடியது நான்கு ஒலிபெருக்கிகள் மட்டும்தான் பாவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 1980ஆம் ஆண்டு, 924/12 ம் இலக்க சுற்றாடல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சத்தத்தின் எல்லை (Noise Level) பகல் நேரத்தில் 55 dB எல்லையைத் தாண்டாமலும் இரவு நேரத்தில் 45 dB எல்லையைத் தாண்டாமலும் இருக்கவேண்டும் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

இதனையும் மீறி இவ்வாலயத்தில் ஆறு ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு அதிக ஒலியெழுப்பப்படுவது இளவாலை பொலிஸாரினதும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினதும் அசண்டையீனத்தையே புலப்படுத்துகின்றது என பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட அண்மைக்காலங்களிலும் இதே பிரிவில் சில வணக்க ஸ்தலங்களில் இவ்வாறான சட்ட மீறல்களைப் பொதுமக்கள் பொலிஸாருக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளினாலும் ஒலிபெருக்கிகள் குறித்த கட்டுப்பாடுகளும் அவை தொடர்பில் பொதுமக்கள் அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்களும் அந்தந்த பிரதேச செயலர்களால் செயலகங்களின் உத்தியோகபூர்வ முகநூல்கள் மூலமும், சுவரொட்டிகள் மூலமும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், யாழ். மாவட்டத்தில் ஒலிபெருக்கியால் பெரிதும் பாதிக்கப்படும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அவ்வாறு எவையும் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்படவில்லை. அரச அதிபர் இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து

# விண்ணப்பம் கோரல்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியத்திடமிருந்து (CEWET) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரம், பட்டப்படிப்புக் கற்கை நெறிகள் மற்றும் இலங்கையின் ஏதேனும் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில்/தொழில்நுட்பக்கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

க.பொ.த சாதாரண தரத்தில் (குறைந்தது 6 திறமைச் சித்திகளுடன்) சித்தியடைந்த அல்லது உயர் தரத்தில் சித்தியடைந்த 25 வயதிற்கு குறைந்த மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்கள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றிதழ், க.பொ.த சாதாரண தரம் அல்லது உயர் தரப்பரீட்சைப் பெறுபேற்றுத்தாள்கள், பெற்றோர்களது சமீபத்திய சம்பளத்தாள் விபரம், பெற்றோரது வேலை தொடர்பாக தோட்ட அத்தியட்சகரினது அத்தாட்சி மற்றும் விண்ணப்பிக்கும் மாணவர்களின் வங்கி கணக்கு புத்தகம் (Updated) என்பவற்றின் போட்டோ பிரதிகளுடன் இணைந்ததாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் https://www.hcicolombo.gov.in/ எனும் இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளமுடியும்.

இந்திய உயர் ஸ்தானிகராலயம், (36-38 காலி வீதி, கொழும்பு 03) மற்றும் இந்திய துணை உயர் ஸ்தானிகராலயம், (இல. 42, ஹில்பஹந்துர மாவத்தை, அம்பிட்டிய வீதி, கண்டி) ஆகிய முகவரிகளிலும் விண்ணப்பப் படிவங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் செயலாளர், இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியம் (CEWET) மே/பா, இந்திய உயர் ஸ்தானிகராலயம், த.பெ.இலக்கம்-882, கொழும்பு-03 என்ற முகவரிக்கு 2025 ஏப்ரல் 28ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கும் வகையில் அனுப்பப்படுதல் வேண்டும்.

### வாய்வழி புற்றுநோயால்

# “தினமும் மூவர் மரணம்”

வாய்வழி புற்றுநோயால் இலங்கையில் தினமும் மூன்று பேர் உயிரிழக்கின்றனர் என்று வாய்வழி மற்றும் முக அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஆனந்த் ரத்நாயக்க கூறியுள்ளார். உலக வாய்வழி சுகாதார தினம் வியாழக்கிழமை (20) அன்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் உள்ள சுகாதார மேம்பாட்டு பணியகம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், புகையிலை, புகையிலை



தொடர்பான பொருட்கள் மற்றும் வெற்றிலை ஆகியவை இந்த நோய்க்குப் பங்களிக்கும் புற்றுநோய் காரணிகள் என்பது உறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று மருத்துவர் ரத்நாயக்க விளக்கியுள்ளார்.

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 3,000 புதிய வாய்வழி புற்றுநோயாளர்கள் பதிவாகின்றனனர் என்று மருத்துவர் ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், ஆரம்பத்தில் கண்டறியப்பட்டால், வாய்வழி புற்றுநோயை எளிதாக நிர்வகிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

புகைபிடித்தல் மற்றும் வெற்றிலை மெல்லுதல் ஆகியவையே இந்த கொடிய நோயின் வளர்ச்சியில் முக்கிய ஆபத்து காரணிகள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

புகையிலை மற்றும் வெற்றிலை நுகர்வுடன் தொடர்புடைய சுகாதார அபாயங்களை இந்த ஆபத்தான புள்ளிவிவரங்கள் தெளிவாக நினைவூட்டுகின்றன என்றார்.

மேலும் உயிர் இழப்பைத் தடுக்க விழிப்புணர்வு மற்றும் ஆரம்பகால கண்டறிதலின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.









## திஸ்ஸவில் கட்டிடம் திறப்பு: மக்கள் எதிர்ப்பு

■ நிதர்ஷன் வினோத்

பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கும், தையிட்டி திஸ்ஸ விகாரை பகுதியில் இராணுவத்தின் முழு முயற்சியுடன் மற்றொரு சட்டவிரோத கட்டிடம் ஞாயிற்றுக்கிழமை (23) காலை திறந்து வைக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தையிட்டி காணி உரிமையாளர்கள், அரசியல் தரப்புக்கள், பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.








## சிவனடி சென்ற 14 பேர் கைது

■ எஸ்.கணேசன்

சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்றவர்களில் போதைப் பொருட்களை எடுத்துச் சென்ற 14 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக ஹட்டன் பிரதேச பொலிஸ் கண்காணிப்பாளர் பிரதீப் வீரசேகர தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் ஹஷிஷ், கஞ்சா, கலந்த மோதக மாத்திரைகள் மற்றும் புகையிலை கலந்த மாவா ஆகியவற்றை வைத்திருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சிவனொளிபாதமலை யாத்திரையின் போது போதைப்பொருள் கொண்டு சென்றவர்களைக் கைது செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுடன் இணைந்து, நல்லதண்ணி, மஸ்கெலியா, பொல்பிட்டிய, நோட்டன்பிரிட்ஜ், கினிகத்தேனை மற்றும் நோர்வூட் ஆகிய பொலிஸ் நிலைய பொலிஸாரின் உதவியுடன் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு பகுதிகளில் வசிக்கும் சந்தேக நபர்கள் 25-40 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், அதிகமான ஒளி சாதனங்கள் பொருத்தப்பட்டு சிவனொளிபாதமலை யாத்திரர்களை ஏற்றிச் சென்ற பல தனியார் பஸ்களையும் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

மேலும், இந்த பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக சாதனங்களை அகற்றி அப்புறப்படுத்துமாறு பஸ் ஓட்டுநர்களுக்கு பொலிஸார் இதன்போது எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## பெண்ணிடம் சேஷ்டை புரிந்தவர் கைது

■ பு.கஜிந்தன்

யாழ். மல்லாகம் நீதிமன்றத்தில் கடமை புரியும் 48 வயதுடைய, திருமணமாகாத நபர் ஒருவர், நீதிமன்றத்தில் வேலை செய்யும் 28 பெண்ணை தொடர்ச்சியாக சேஷ்டையில் ஈடுபட்டு வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத குறித்த பெண், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபரை விசாரணைகளுக்கு அழைத்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் கைது செய்தனர். குற்றம் நிகழ்ந்த இடம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குள் உள்ளடங்குவதால் சந்தேக நபர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## டீசலை அருந்திய குழந்தை மரணம்

■ பு.கஜிந்தன்

டீசலை அருந்திய ஆண் குழந்தை உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை (22) அதிகாலை இடம்பெற்றுள்ளது

ஊர்காவற்றுறை, நாரந்தனை தெற்கு பகுதியைச் சேர்ந்த ஒரு வயது 9 மாதங்கள் நிரம்பிய சதீஷ் ரஞ்சித் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தந்தை லான்மாஸ்டர் திருத்த வேலையில் கடந்த 18ஆம் திகதி ஈடுபட்டுள்ளார். பின்னர் டீசலை ஒரு போத்தலில் வைத்து விட்டுச் சென்றுள்ளார்.

இதன்போது அவ்விடத்திற்கு வந்த குழந்தை பானம் என நினைத்து டீசலை அருந்தியது. இந்நிலையில் குழந்தை மயக்கமுற்றது. பின்னர் குழந்தை ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை (22) அதிகாலை 2.30 மணியளவில் உயிரிழந்தது. குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



## இடி விழுந்ததால் குடியிருப்புகள் சேதம்

■ செ.தி.பெருமாள், ரஞ்சித் ராஜபக்ஷ

நோர்வூட், வெஞ்சர் பகுதியில் சனிக்கிழமை (22) மாலை பெய்த இடியுடன் கூடிய மழையின்போது, மரமொன்றின் மீது இடி விழுந்ததில் மரத்தின் கிளைகள் முறிந்து அருகிலிருந்த தோட்ட குடியிருப்புகள் மீது விழுந்து கூரைகளுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

மின்னல் தாக்குதலுடன் அருகில் இருந்த மரங்கள் திடீரென விழுந்ததாகவும், இதனால் தங்கள் வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## புண்ணாக்கு லொறி புரண்டது



ஹட்டன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஹட்டன் - செனன் பகுதியில் புண்ணாக்கு ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வீதியை விட்டு விலகி, ஞாயிற்றுக்கிழமை (23) அன்று விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

குருநாகல் பகுதியில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த லொறியே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது. லொறியில் பயணித்த சாரதி உட்பட ஏனைய இருவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவித்த ஹட்டன் பொலிஸார், இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அறிவோர் ஒன்று கூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர் வானதி காண்டீபன் தலைமையில் விநோதன் மண்டபத்தில் புதன்கிழமை (26) மாலை 5.30 மணிக்கு அறிவோர் ஒன்று கூடல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இதில், ‘திருக்குறளில் ஒப்புரவுக் கருத்துக்கள்’ எனும் தலைப்பில் இராஜஸ்தான் மத்திய பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர், பேராசிரியர் என்.லக்ஸ்மி ஐயர் உரையாற்றவுள்ளார் என கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி ஜெ.தற்பரன் அறிவித்துள்ளார்.

## 8 பசுக்களை ஏற்றிச் சென்ற இருவர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

அனுமதிப்பத்திரம் இன்றி 8 பசுக்களை சித்திரவதைக்கு உட்படுத்தும் வகையில் வாகனத்தில் ஏற்றிச் சென்ற சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்யப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் பகுதியில் இருந்து வவுனியா பகுதிக்கு இந்த பசு மாடுகளை ஏற்றிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

கொடிகாமம் நகரப் பகுதியில் வைத்து சந்தேகத்துக்கு இடமான எல்ப் ரக வாகனம் சோதனை இடப்பட்ட பொழுது பசு மாடுகள் மிகவும் முன்னங்கால்களும் பின்னங்கால்களும் கட்டப்பட்ட நிலையில் சித்ரவதை செய்து எடுத்துச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு எதிராகவும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தவறான முடிவெடுத்த சிறுமி மரணம்

■ பு.கஜிந்தன்

யாழில் தவறான முடிவெடுத்து சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இராஜேஸ்கண்ணா சஞ்சிகா (வயது 17) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி கடந்த 20ஆம் திகதி தவறான முடிவெடுத்து அதிக மாத்திரைகளை உட்கொண்ட நிலையில், அவரது பெற்றோர் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி சிகிச்சை பலனின்றி வெள்ளிக்கிழமை (21) அன்று உயிரிழந்துள்ளார். சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார்.

தேவை

வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய சமையல் தெரிந்த பணிப்பெண்ணொருவர் மற்றும் செவிலியர் ஒருவர் தேவை, கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டையுடன் தொடர்புக்கொள்ளவும். 077- 8742463

# காசநோயை முடிவுக்குக் கொண்டுவர உறுதி எடுப்போம்

உலக காசநோய் தினம் இன்றாகும் (மார்ச் 24) இன்றைய தினத்தில் உலகளாவிய ரீதியில் பல்வேறான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கையில், “ஆம், காசநோயை முடிவுக்குக் கொண்டுவர முடியும். உறுதியளிப்போம், முதலீடு செய்வோம், சேவை செய்வோம்” என்ற கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகிறது.

இலங்கையை பொறுத்தவரையில், 2024இல் 9,180 காசநோயாயளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 93 சதவீதமானோர் புதிதாகக் கண்டறியப்பட்டவர்கள் என்றும் காசநோய் கட்டப்பாட்டுக்கும், முகாமை செய்வதற்கும் தேசிய காசநோய் மற்றும் இருதய நோய்கள் கட்டப்பாட்டு நிகழ்ச்சி திட்டம் கூறுகின்றது.

முதன்முறையாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் 75 சதவீதமானோர் நுரையீரல் காசநோய் நோயாளிகள் என்றும், அவர்களில் 60 சதவீதமானோர் சளியில் கிருமிகளைக் கொண்ட நோயாளிகள் என்றும் இந்த திட்டம் சுட்டிக்காட்டுகிறது.

இதற்கிடையில், காசநோய் இறப்புகள் குறித்த நாட்டில் கிடைக்கும் சமீபத்திய தரவுகளான 2023ஆம் ஆண்டு அறிக்கையின்படி, அந்த ஆண்டு 733 பேர் இறந்தனர். இது அனைத்து நோயாளிகளிலும் 7.9 சதவீதமாகும் 55 வயதுக்கு மேற்பட்ட வயதினரிடையே காசநோய் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிகிச்சைக்காகத் தாமதமாக வழங்குவதும், பிற இணை நோய்கள் இருப்பதும் பெரும்பாலான காசநோய் இறப்புகளுக்குக் காரணம் என்பது தெரியவந்துள்ளது.
அத்துடன், ஒரு காசநோயாளியிடமிருந்து ஒரு வருடத்திற்குள் 15 ஆரோக்கியமானவர்களுக்கு காசநோய் பரவக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காசநோயாளிகளில் 45 சதவீதமானோர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர். இவற்றில் 25 சதவீதமானோர் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளன, மேலும் அந்த நோயாளிகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் கொழும்பு மாநகர சபை எல்லைகளிலிருந்து பதிவாகியுள்ளனர். மேலும், கம்பஹா, களுத்துறை, காலி மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களிலிருந்து கணிசமான எண்ணிக்கையிலான தொற்றுகள் பதிவாகி உள்ளது.

நாட்டில் கணிக்கப்பட்ட மற்றும் அடையாளம் காணப்படவுள்ள காசநோய் நோயாளிகளின் எண்ணிக்கை 14,000 என்றும், ஆனால் சுமார் 9,500 பேர் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது தெரியவருகின்றது.

அதன்படி, தவறவிடப்பட்ட நோயாளிகளில் 15 சதவீதமானோர் குழந்தைகள் என்றும், சுமார் 25 சதவீதமானோர்65 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது. மேலும், வேலை செய்யும் நபர்களில் சுமார் 41 சதவீதம் 45-64 வயதுக்குட்பட்டவர்கள்.

காசநோய் தொற்றாமல் இருக்க, முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். அத்துடன், ஏதாவது அறிகுறிகள் தென்பட்டால், அருகிலுள்ள வைத்திய சாலைக்குச் சென்று, மருத்து உதவிகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். இல்லையேல், காச நோய் தொற்றில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்வது கடினமாகும் என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா? மெல்ல மெல்ல பட்டைதீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகிவிட முடியாது. ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக! மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

பருத்தியூர் பால.வயிரவநாதன்

# அனுர போட்ட முடிச்சு

லக்ஸ்மன்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகைக்கும், நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கும் ஒரு முடிச்சைப் போட்டு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இவ்வாருடத்துக்கான வரவு-செலவுத் திட்ட விவாதத்தை முடித்து வைத்தார். மிகவும் லாவகமான பேச்சுக்கள் மூலம் மக்களை தம்வசம் இழுத்து வைத்துக் கொள்வதில் அனுரவுக்கு நல்ல இயலுமை இருக்கிறது. அவருடைய ஒவ்வொரு பேச்சும் இலங்கை மக்களின் உள்ளிருக்கும் பல விடயங்களை வெளியே எடுத்து விடுவதைச் செய்து விடுகின்றன.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான இரண்டாம் நாள் குழுநிலை விவாதத்தின் இறுதியில் பதிலளித்து உரையாற்றிய ஜனாதிபதி, எதிர்க்கட்சிகள் தமது அரசு மீதுள்ள கோபத்திலும் வேதனையிலும் தான் விமர்சனங்களை முன்வைத்தன என்று கூறினார்.

தேர்தல் காலத்தில் பிரசாரங்களைச் செய்கின்ற போது, பலவாறு பலதையும் கூறிய ஜனாதிபதி இப்போது யதார்த்தத்திலும் உத்தியோகப்பூர்வமாகவும் வங்குரோத்து அடைந்த நாட்டையே நாங்கள் பொறுப்பேற்றோம் என்று கூறியிருக்கிறார். இதன் அர்த்தம் தேர்தல் கால வாக்குறுதிகளைக் கணக்கிலெடுக்காதீர்கள் என்பதாகக் கூட இருக்கலாம்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நாடு பெற்றுள்ள கடன்களின் வட்டிகளைச் செலுத்துவதற்காக 2950 பில்லியன் ரூபாவும், அரச சேவை சம்பளத்திற்காக 1352 பில்லியன் ரூபாவும், ஓய்வூதிய கொடுப்பனவைச் செலுத்துவதற்காக 442 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசின் செலவினத்தைக் குறைப்பதற்காக வருவாயை அதிகரிக்கவென அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள் நீக்கப்பட்டு அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்பட்டு அதிலிருந்து கழிக்கப்படுகின்றவைகள் அதிகமாகியிருக்கின்றன. இது அரச ஊழியர்களுக்காக செலவிடப்படும் தொகையைக் குறைக்கும். இது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகவே இருக்கிறது. அவ்வாறானால் அரச ஊழியர்களின் கைகளுக்குக் கிடைக்கும் பணத்தின் அளவு இப்போதைக்குக் குறைவாகவே இருக்கப்போகிறது. ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்பட்ட நிதி போதாது, பிரதேசங்களுக்கான நிதிகள் குறைவு என பல விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிலையில்தான் இவ்வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேறியிருக்கிறது.

அனுர ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்குச் சென்று வந்தார் பின்னர் சீனாவுக்குச் சென்றார். வேறு பல நாடுகளுக்கும் பயணமாக இருக்கிறார். அவரது பதவிக்காலத்தின் ஆறு மாத காலத்துக்குள் நாட்டு மக்களுக்காக அவர் செய்து முடித்திருக்கின்றார் என்று கேள்வி கேட்பதனை விடுத்து இவ்வாறு கதைகளை அடித்துவிடுவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சாதாரணமாக இருக்கிறது.

ஒன்றுக்காக ஒன்றைப் பதிலீடாகக் கொடுக்கின்ற அல்லது காண்பிக்கின்ற சம்பவங்கள் வழமையாகவே நடைபெற்றுவருவதுதான். ஆனால் இங்கு வழமையைவிடவும் அதிகமாக நடைபெறுகிறதோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது. நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த பொருளாதார கொள்கையை எடுத்த எடுப்பில் மாற்றிவிடுவது சாத்தியமற்ற ஒன்றே. இதற்குள் தேசிய மக்கள் சக்தி சொல்வதைப்போல் பொருளாதாரத்தை மக்களுக்கு ஏற்றால் மாற்றியமைப்பது மிகச் சிரமாகவே இருக்கும்.

வரவு-செலவுத் திட்ட முன்வைப்பின்போது, எதிர்ப்புகள் தெரிவிக்கப்படுவதும், விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதும் வெறுமனே விலக்கி விடப்படாமல் சாதகமான விடயங்கள் பரிசீலிக்கப்படுதல் நாட்டுக்குச் சிறப்பானதாகும். இந்நிலையில் பொருளாதார நிலைப்பாட்டினை நோக்குகையில், தேசிய மக்கள் சக்தி தங்கள் தேர்தல் கால பிரசாரத்தில் முன்வைத்திருந்த, ரணில் விக்ரமசிங்கவினால் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச நாணயநிதியத்தின் கடன் வசதிக்காகக் காண்பித்த எதிர்ப்புகள் இப்போது எங்கே போயின என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. இருந்தாலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு இருக்கின்ற சர்வதேச நாணய நிதியத்தின் பரந்தளவிலான கடன் வசதிகளுடன் நாட்டைக் கொண்டுசெல்லுதல் என்ற வழியே அவர்களுக்கு இருக்கிறது என்பது மாத்திரமே நிலைமை.

இந்த நிலைமையில் இருந்து கொண்டு பொருளாதாரம் ஸ்திர நிலையை அடைந்து விட்டது என்ற கதையை எவ்வாறு அனுரவால் சொல்ல முடிகிறது என்பது தான் வேடிக்கை. ஆனால், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம் என்று கூறமுடியும். இந்தியாவும் சீனாவும் மாத்திரமே ஏட்டிக்குப் போட்டியாக தங்களுடைய ஆதிக்கத்தை நிலைப்படுத்துவதற்காகவும், அதிகரித்துக் கொள்வதற்காகவும் மேற்கொள்ளும் வேலைகள் நாட்டில் நூறு வீதம் பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தி விடாது என்பது மறக்கப்படக் கூடாதது.

இந்நிலையில்தான், தன்னுடைய நாட்டு நலன்களைப் பிரதான நோக்காகக் கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 5ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்கிறார். அவ்வேளையில், பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட இருக்கின்றன. முக்கியமாக சம்பூர் மின் நிலையத்துக்கான நிர்மாணத்தை இந்தியப் பிரதமர் ஆரம்பித்து வைப்பார். அதனை தவிர, வேறு ஒன்றும் நடைபெறப்போவதில்லை. அயல் நாட்டின் தலைவரின் வருகைக்குப் பொருளாதார ஸ்திரநிலையைக் கொண்டு முடிச்சிடுவது எந்தவகையில் பொருந்தும் என சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

159 ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் கொண்டிருக்கின்ற ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மையுடன் மக்களின் மகிழ்ச்சிக்கான, நிம்மதியான வாழ்வுக்கான தீர்மானங்களை நிறைவேற்றுவதே நல்லதாகும். அதனை விடுத்து, தேசபந்துவைக் கைது செய்வதே ஒரு பெரும் விடயமாகக் காண்பிக்கப்படுவதும் பாராளுமன்ற உறுப்பினர் முதல் ஜனாதிபதி வரையில் அதற்காகக் கருத்து வெளியிடுவதும். அதில், அவ்வளவு அக்கறையாக இருப்பது எந்தளவுக்கானது என்பது தெரியவில்லை.

தேசபந்து தேடப்பட்டார், தலைமறைவாக இருந்தார்.

அவருக்காகப் பல பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டன. இறுதியில் அவர் நீதிமன்றத்தில் அமர்ந்திருந்தார். இப்போது சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார். இதிலென்ன வேடிக்கையென்றால், அவர் கடமையாற்றிய பொலிஸ்த் துறையின் உத்தியோகத்தர்களாலேயே அவர் வேட்டையாடப்பட்டிருக்கிறார். நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்துக்கு தேசபந்துவின் விளம்பரம் தேசிய மக்கள் சக்திக்குப் போதுமானதாக இருக்கலாம்.

ஆனால், மூன்று வாரங்களாக நாட்டின் உளவுத்துறையால் அவரை ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை. கைது செய்யத் திறந்த பிடியாணை உள்ள ஒருவர், ஒரு சொகுசு காரில் நீதிமன்றத்தில் தோன்றி எப்படி வந்தார்? அவர் எங்கே இருக்கிறார்? என்று காவல்துறைக்குத் தெரியாததா? அல்லது அவர் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் இருந்தாரா? அல்லது அவரைக் கைது செய்ய விரும்பவில்லையா? போன்ற பல கேள்விகள் மக்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றன.

அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியானதும், ஆட்சி கலைக்கப்பட்டு அமைக்கப்பட்ட காபந்து அரசாங்கம் முன்னைய ஜனாதிபதி முதல், அமைச்சர்கள், பிரதானிகள் கைவசம் வைத்திருந்த வாகனங்கள் மீளப் பெறப்பட்ட, துரத்திப் பிடிக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டு ஒரு விளம்பரம் நடத்தப்பட்டது. அது சற்று ஓய்ந்து போகவே ஊழல் தொடர்பான விடயங்கள் வெளியே கொண்டு வரப்பட்டன. பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அமைந்த புதிய அரசாங்கம் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களால் மருத்துவச் செலவுக்கான பணம் பெறப்பட்டவைகள் வெளிப்படுத்தப்பட்டன.

பின்னர். ‘அரகலய’ போராட்டத்தில் பற்றவைக்கப்பட்ட சொத்துக்களுக்காக அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பெற்றுக்கொண்ட இழப்பீடுகள் வெளிக்கு வந்தன. பின் சுத்தமான இலங்கை (கிளீன் சிறிலங்கா). அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்பில் பட்டலந்த ஆணைக்குழு விவகாரம் பூதாகாரமாக்கப்பட்டது.


இவ்வாறு நகரும் அரசு தனக்குரிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளவே முயற்சிக்கிறது என்பது மாத்திரம் தெளிவாகத் தெரிகிறது.

அனுரகுமார ஜனாதிபதியானவுடன், பாராளுமன்றத்தைக் கலைத்து அந்தச் சூட்டுடனேயே பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால், அந்தச் சூட்டுடன் நடத்த முடியாது போன உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான சூடாக வரவு-செலவு திட்டம் பயன்படுத்தப்படப் போகிறது. இருந்தாலும், இன்னமும் இரண்டு மாதங்களில்தான் வரவு-செலவுத் திட்டத்தின் ஊடான பிரதிபலிப்பு தெரிய வரும். அதுவரையில் காலம் தாழ்த்தாது இத் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலின் பின்னரே மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்வர்.

இவ்வாறான நிலையில், “காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த” கதையாக நடைபெறுவனவற்றைக் கொண்டு ஒட்டுமொத்தமான முடிவுக்கு வருவதும் கருத்துக்களை வெளியிடுவதும் பொருத்தப்பாடற்றதாகவே தோன்றுகிறது. நாடு ஸ்த்திரநிலையை எட்டிவிட்டதா? இல்லையா? என்பதை மக்களிடமே கேட்க வேண்டும்.

## கடிதங்கள்

### விபத்து ஏற்படும் அபாயம்



யாழ்ப்பாணம் - மருதங்கேணி, அம்பன் வீதியில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் வீதியில் கொட்டப்பட்ட மணல் இதுவரை அகற்றப்படாமையால் அப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் மற்றும் பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.


இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச சபை, மருதங்கேணி காவல் நிலையம் ஆகியோருக்கும் அறிவித்து இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வீதியில் கொட்டப்பட்டுக் காணப்படும் மணலின் மேலாக வாகனங்களைச் செலுத்துகின்ற போது, சறுக்கல் நிலை ஏற்பட்டு விபத்துகள் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலையில் பயணிகள் பயணிக்கின்றனர். இது தொடர்பான விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சமூக அக்கறையுள்ள பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

- பு.கஜிந்தன்



# முதன்முறையாக முன்னெடுக்கப்படும் கொழும்ப கமத திருவிழா


இலங்கையின் முதலாவது கொழும்ப கம திருவிழா (KKF) கொழும்பு BMICHஇல் மார்ச் 27 முதல் 30 வரை முன்னெடுக்கப்படவுள்ளது. சர்வதேச திரையரங்கு தினத்துடன் முன்னெடுக்கப்படும் இந்த திருவிழாவில், தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில திரையரங்க திறமைகள் வெளிப்படுத்தப்படவுள்ளதுடன், பன்முகத்தன்மையை வெளிப்படுத்தி, கலைஞர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு கலாசார மையத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்திருக்கும்.

பாரம்பரிய திருவிழாக்களில் இடம்பெறும் ஒன்று அல்லது இரண்டு கலையம்சங்கள் தொடர்ச்சியாக சில தினங்களுக்கு முன்னெடுக்கப்படுவதைப் போலன்றி, KKFஇல் பல பகுதிகளில், ஒன்றுக்கு மேற்பட்ட மாதிரிகளில், பார்வையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், ஒரு நாளில் ஏழு தயாரிப்புகள் வீதம், ஏழு பகுதிகளில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும்.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை தொடர்பில் KKFஇன் பணிப்பாளர் சஞ்சலா குணவர்தன கருத்துத் தெரிவிக்கையில், "நான்கு நாட்களில் நாம் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் பல காட்சிகளை கொண்டிருப்போம். வழமையாக இது போன்ற திருவிழாக்களில் ஒரு காட்சி மீண்டும் மீண்டும் முன்னெடுக்கப்படும். ஆனாலும், இந்த திருவிழா முற்றிலும் மாறுபட்ட வகையில் அமைந்திருக்கும். இந்த நிகழ்வுகளுக்காக புதிதாக அமைக்கப்பட்ட 230 ஆசனங்களைக் கொண்ட திரையரங்கும் திறக்கப்படும். கொழும்ப கமத மையத்தினால் இந்த திருவிழா பணிகளுக்கு




ஆரம்ப வித்திடப்பட்டிருந்தது. 2022 நவம்பர் மாதத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வழிகாட்டல்களுக்கமைய இந்த மையம் நிறுவப்பட்டது. இந்த திருவிழாவின் முன்னணி ஆலோசகராக அவர் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. திரையரங்கு கலாசாரம் தொடர்பில் அவர் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளார். அவரின் நீண்ட கால ஆர்வத்தின் வெளிப்பாடாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது" என்றார்.


நான்கு நாட்கள் முன்னெடுக்கப்படும் இந்த திருவிழா நிகழ்வில் கலை, கைவினைப் பொருட்கள், உணவு மற்றும் இதர தொடர்பாடல் பகுதிகள் போன்றவற்றைக் கொண்ட சந்தைப்பகுதி உள்ளடங்கியிருக்கும். திருவிழாவின் திரையரங்கு அம்சங்களை பிரதிபலிக்கும் வகையிலே இந்த சந்தைப்பகுதி அமைந்திருக்கும் என குணவர்தன குறிப்பிட்டிருந்தார். நிகழ்வில் பங்கேற்போரை திரையரங்கு அனுபவத்துக்கு அப்பால் கொண்டு செல்லும் வகையில் முகத்துக்கு வர்ணம் தீட்டல், நேரடி ஓவியம் தீட்டல் மற்றும் திறந்த வெளி திறன் வெளிப்படுத்தல்கள் போன்ற அம்சங்களும் இந்த சந்தைப்பகுதியில் அடங்கியிருக்கும்.

நிகழ்வை வெற்றிகரமாக ஏற்பாடு செய்வதற்கு ஆதரவளிக்கும் பிளாட்டினம் அனுசரணையாளர் காகில்ஸ், தங்க அனுசரணையாளர் மஹேஷ் மற்றும் ஷைலா அமலீன், வெள்ளி அனுசரணையாளர் NDB வெல்த், திருவிழா சந்தை அனுசரணையாளர் கொமர்ஷல் வங்கி ஆகியவற்றுக்கும் ஊடக பங்காளர்களுக்கும் குணவர்தன நன்றி தெரிவித்தார்.

இதர கலாசார நிகழ்வுகளைப் போல, இந்த திருவிழாவும் கொழும்பிலிருந்து இதர நகரங்களுக்கும் வியாபிக்க தாம் எதிர்பார்ப்பதாகவும், உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் இந்த திருவிழா தொடர்பில் விழிப்புணர்வை கொண்டு செல்வதுடன், வருடாந்தம் இந்த நிகழ்வை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

KKFநிகழ்வுக்கான அனுமதி டிக்கட்களை திருவிழாவின் இணையத்தளத்திலும், BMICH இல் அமைந்துள்ள பதிவு அலுவலகத்திலும் ரூ.3,000 மற்றும் ரூ. 500 ஆகிய விலைகளில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.





# யூனியன் வங்கி Product Power Forum 2025ஐ ஆரம்பித்துள்ளது

வங்கியின் மாற்றியமைப்பு செயற்பாடுகள் மற்றும் புதிய மூலோபாய நோக்கத்தின் அங்கமாக, ஊழியர்களின் திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்தும் பணிகளை யூனியன் வங்கி தொடர்ந்தும் முன்னெடுத்த வண்ணமுள்ளது. யூனியன் வங்கியின் கிளைகளைச் சேர்ந்த முன்கள ஊழியர்களின் தயாரிப்பு அறிவை மேம்படுத்தும் ஈடுபாட்டு நிகழ்வொன்றை Product Power 2025 எனும் தொனிப்ப பொருளின் கீழ் வங்கி அண்மையில் முன்னெடுத்திருந்தது.

சேமிப்புகள் மற்றும் முதலீடுகள், கடன்கள், கடன் அட்டைகள், அடகுச் சேவைகள், லீசிங், டிஜிட்டல் வங்கிச் சேவை மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மை பெறுமதி பிரிவுகள் போன்ற பிரதானஅம்சங்களை உள்ளடக்கி, வங்கியின் தயாரிப்பு நிபுணர்களால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் முதல் சுற்றில் 200க்கும் அதிகமான கிளை ஊழியர்கள் பங்கேற்றிருந்ததுடன், ஒன்லைன் தயாரிப்பு புதிர் போட்டி அடங்கலாக பல்வேறு ஈடுபாடுகளுடனான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் வங்கியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி தில்ஷான் ரொட்ரிகோ உரையாற்றியிருந்தார். தமது உரையில், 2025ஆம் ஆண்டுக்கான வங்கியின் மூலோபாய நோக்கு மற்றும் இலக்குகள் பற்றிய தெளிவுபடுத்தல்களை வழங்கியதுடன், தொடர்ச்சியான மாற்றத்துக்கு வங்கியின் அர்ப்பணிப்பு மற்றும் ஊழியர்களின் வளர்ச்சி மற்றும் விருத்திக்காக ஈடுபாட்டு செயற்பாடுகள் பற்றிய விடயங்கள் அடங்கியிருந்தன.

" காசநோய்க்கு எதிராக கண்டுபிடிக்கப்பட்ட முதல் தடுப்பு மருந்து BCG தடுப்பு மருந்து என்று அழைக்கப்படுகிறது. காசநோய் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத காலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று குறிப்பிடப்படுகிறது



# காசநோய் விழிப்புணர்வு அவசியம்

உலகம் முழுவதும் வாழும் மக்களிடையே காசநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சர்வதேச காச நோய் தினம் ஆண்டு தோறும் மார்ச்24ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதை எப்படி தடுப்பது, என்னென்ன காரணங்களால் உண்டாகிறது, அறிகுறிகள் என்னென்ன என்பது குறித்து கட்டாயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

### காசநோய் பாதிப்பு

உலகம் முழுவதும் ஆண்டுதோறும் மில்லியன் கணக்கானோர் இந்த காசநோயால் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த 2024ஆம் ஆண்டில் மட்டும் 8.2 மில்லியன் பேர் உலகம் ழுவதும் காசநோயால் பாதிக்கப்பட்டனர். அதோடு கிட்டதட்ட 1.5 மில்லியன் பேர் காசநோயால் இறந்தனர். இந்த காச நோய் பாதிப்பு பெரும்பாலும் வளராத மற்றும் வளரும் நாடுகளில் தான் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

### காசநோய் தினம் தோன்றிய வரலாறு

1982ஆம் ஆண்டு தான் முதன்முதலாக அதிகாரப்பூர்வ உலக காசநோய் தினம் கடைபிடிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் முன்மொழியப்பட்டது. இந்நிலையில் 1995ஆம் ஆண்டு WHO மற்றும் ரோயல் நெதர்லாந்து காசநோய் அறக்கட்டளை (KNCV) இணைந்து முதல் உலக காசநோய் தின ஆலோசனை திட்டமிடல் கூட்டத்தை நெதர்லாந்தில் நடத்தியது.

இதையடுத்து, தொடர்ச்சியாக உலக சுகாதார நிறுவனம் இதற்கான முன்னெடுப்புகளை நடத்தி வந்த நிலையில், முதன்முதலாக 2000ஆம் ஆண்டு உலக காசநோய் தினம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டது. அதன் தொடக்கம் இந்தியாவில் ஹைதராபாத்தில் காசநோய் சிகிச்சைக்கான மையம் (DOTS) தொடக்கத்தின் மூலம் நடந்தது. அதையடுத்து தான் உலகம் முழுவம் இந்த காசநோய் தினம் கடைபிடிக்கப்பட்டது.

### காசநோய் எப்படி பரவுகிறது?

மைக்கோ பாக்டீரியம் ட்யூபர்குலோசிஸ் டிபி காற்று மூலம் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு எளிதில் பரவக்கூடிய மிக மோசமான தொற்றுநோயாகும். இந்த காச நோய் யாரை வேண்டுமானாலும் பாதிக்கக்கூடும். குறிப்பாக நோயெதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களை மிக எளிதாக பாதிக்கும்.

### யாருக்கு ஆபத்து அதிகம்?

* பலவீனமான நோயெதிர்ப்பு
* மண்டலம் உடையவர்கள்,
* புகைப்பழக்கம் உள்ளவர்கள்,
* அதிகமாக மது அருந்துபவர்கள்,
* ஸ்டீராய்டு மருந்துகள் அதிகம் பயன்படுத்துவோர்,
* சில வகை புற்றுநோய் பாதிப்புள்ளவர்கள்,
* ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள்,

ஆகியோரை இந்த காசநோய் எளிதாகத் தாக்கக்கூடும்.

### காசநோய் அறிகுறிகள் என்னென்ன?

* தலைவலி,
* அடிக்கடி காய்ச்சல்,
* சளித் தொல்லை,
* பசியின்மை,
* முகம் வெளிறி போதல்,
* திடீர் எடை குறைதல்

போன்றவை ஏற்படும்.

### காசநோயை கண்டறியும் சோதனைகள்

காசநேயை அவற்றுக்கான சில இரத்தப் பரிசோதனைகள், சிடி ஸ்கேன், எம்ஆர்ஐ ஸ்கேன், ஆகிய பரிசோதனைகளின் மூலம் கண்டறிகிறார்கள்.
காசநோய்க்கான சிகிச்சைகள் காச நோயை பொருத்தவரையில் உடலின் எந்த பாகத்தில் பாதிப்பு அதிகமாக இருக்கிறது, அதன் தீவிரத் தன்மை எப்படி இருக்கிறது, ஆகியவற்றைப் பொருத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த முன்னெடுப்புகளை ஊக்கப்படுத்தவும் உலகம் முழுவதிலும் காசநோயை முற்றிலும் ஒழிக்கவும் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த காச நோய் தினம ஒவ்வொரு ஆண்டும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

### பக்க விளைவுகள் உண்டாகுமா?

தாமதமாக காசநோயைக் கண்டறியும் பட்சத்தில் குணமடைந்த பிறகு வேறு பாதிப்புகள் தொடரலாம். உதாரணமாக, காசநோயால் நுரையீரல் பாதிக்கப்பட்டு கண்டறியப்படாத பட்சத்தில்



நுரையீரலின் ஆரோக்கியம் வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருக்கும். இதனால் காசநோயிலிருந்து குணமடைந்த பிறகும் நுரையீரல் தொடர்பான பிரச்சினைகள் உண்டாகலாம். தொடர் கண்காணிப்பு அவசியம்.

அத்துடன், மாத்திரைகளை சரியாக உட்கொள்வதும், குறிப்பிட்ட காலத்தை முழுமையாக நிறைவு செய்வதும் காசநோய் சிகிச்சையில் முக்கியம். இல்லாவிட்டால் பாக்டீரியாக்களை மருந்துகளால் கட்டுப்படுத்த இயலாத நிலை உண்டாகிவிடும். Drug resistant TB என்று குறிப்பிடப்படும் இந்த நிலையால் மீண்டும் மாத்திரைகள் கொடுக்கும்போது பலன் குறைவாகவும், பக்கவிளைவு அதிகமாகவும் ஆகிவிடலாம். அதிர்ஷ்டவசமாக இதுபோன்ற Drug ressitant TB ஏற்படுகிறவர்களின் சதவிகிதம் 2 சதவிகிதமாக இருப்பது ஓர் ஆறுதல். எனவே முறையான, முழுமையான சிகிச்சையைப் பெறுவது நோயாளியின் கடமை.

### காசநோய் தடுப்பு முறை

காசநோயின் தீவிரத்தைப் புரிந்துகொண்ட உலக சுகாதார நிறுவனம் 1993ஆம் ஆண்டு அதை கட்டுப்படுத்துவதற்கான உலகளவிய திட்டத்தை கொண்டு வந்தது. அதன் தொடர்ச்சியாக தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், நோய் வந்தபின் அதற்கான தனிப்பட்ட சிகிச்சையோ மருந்தோ கிடையாது.

காசநோய்க்கெதிராக கண்டுபிடிக்கப்பட்ட முதல் தடுப்பு மருந்து BCG தடுப்பு மருந்து என்று அழைக்கப்படுகிறது.

காசநோய் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத காலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று குறிப்பிடப்படுகிறது.

அரியானா

துப்பாக்கிச்சூட்டில்

# அர்ச்சகர் உட்பட 25 பேர் காயம்



அரியானாவில், சனிக்கிழமை (22) நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில், அர்ச்சகர் உட்பட 25க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

உத்தரப் பிரதேசம் பிரயாக்ராஜை சேர்ந்த சுவாமி ஹரி ஓம் தாஸ், அரியானாவின் குருஷேத்ராவில் கடந்த 18ஆம் திகதி, சிறப்பு யாகத்தைத் தொடங்கினார். இதில் 1,008 அர்ச்சகர்கள் பங்கேற்று யாகம் நடத்தினர். அவர்களுக்குத் தரம் குறைந்த உணவு வகைகள் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அர்ச்சகர்களுக்கும், சுவாமி ஹரி ஓம் தாஸின் பாதுகாவலர்களுக்கும் இடையே சனிக்கிழமை (22) காலை மோதல் ஏற்பட்டது. அப்போது சுமார் 70 அர்ச்சகர்களை, பாதுகாவலர்கள் அடித்து விரட்டியதாகக் கூறப்படுகிறது. ஆத்திரமடைந்த அர்ச்சகர்கள் யாகம் நடைபெற்ற பகுதியில் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு அமைக்கப்பட்டிருந்த பந்தல்கள், கொடிக்கம்பங்கள் சேதப்படுத்தப்பட்டன. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், லேசான தடியடி நடத்தி போராட்டத்தில் ஈடுபட்ட அர்ச்சகர்களை அப்புறப்படுத்தினர்.

இதற்கிடையில் சுவாமி ஹரி ஓம் தாஸின் பாதுகாவலர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகக் கூறப்படுகிறது. இதில், அர்ச்சகர் ஒருவர் உட்பட சுமார் 25க்கும் மேற்பட்ட அர்ச்சகர்கள் காயம் அடைந்தனர்.

இதுகுறித்து மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த அர்ச்சகர் பிரசாந்த் கூறும்போது, "எங்களுக்குத் தரமான உணவு வகைகள் வழங்கப்படவில்லை. இது குறித்துக் கேட்டபோது பாதுகாவலர்கள் எங்களைத் தாக்கினர். ஒரு பாதுகாவலர் 6 முறை துப்பாக்கியால் சுட்டார். இதில் ஓர் அர்ச்சகரின் வயிற்றில் குண்டு பாய்ந்தது. யாகத்தை நடத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

பொலிஸார் கூறும்போது, "யாகத்தில் பங்கேற்ற அர்ச்சகர்களுக்கும் பாதுகாவலர்களுக்கும் இடையே பிரச்சினை எழுந்துள்ளது. இதன் காரணமாக சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாகக் குழப்பமான சூழல் நீடித்தது. பொலிஸாரின் அதிதீவிர நடவடிக்கைகளால் இயல்பு நிலை திரும்பியிருக்கிறது. சம்பவம் குறித்து முழுமையாக விசாரணை நடத்தி வருகிறோம்" என்று தெரிவித்தனர்.

கர்நாடகா

# தேர் சாய்ந்ததில் இருவர் பலி





கர்நாடகா மாநிலம், பெங்களூரு புறநகர், ஆனேக்கல் தாலுகாவுக்கு உட்பட்ட ஹுஸ்கூருவில் உள்ள மத்தூரம்மா அம்மன் கோவில் தேரோட்டம் நடைபெற்றபோது, உயரமான தேர் சாய்ந்து விபத்துக்குள்ளானதில், இருவர் உயிரிழந்தனர்.

இந்த கோவிலின் வருடாந்த திருவிழா தொடங்கி நடைபெற்று வருகிறது.

திருவிழாவையொட்டி, சனிக்கிழமை (22) தேரோட்டம் நடைபெற்றது. 152 அடி உயரத் தேரில் அம்மன் எழுந்தருளினார். இதில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம்பிடித்து இழுத்து வந்தனர்.

அம்மன் தேரை தொடர்ந்து தொட்ட நாகமங்களா மற்றும் ராயசந்திரா சாமி தேர்களும் வந்தன. இவை இரண்டும் சிறிய தேர்கள் ஆகும்.

அம்மன் வீற்றிருக்கும் 152 அடி உயரத் தேர் கட்டஹள்ளி கிராமம் வழியாக வந்து கொண்டிருந்தது. அப்போது லேசாக அங்கு மழை பெய்தது. இதனால் பக்தர்கள் தேரை மெதுவாக இழுத்து வந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் திடீரென தேர், அப்படியே சாய்ந்து விழுந்தது.

இதனால் பக்தர்கள் அலறியடித்துக் கொண்டு சிதறி ஓடினர். தேரின் அடியில் 11 பக்தர்கள் சிக்கிக் கொண்டனர். அதில் பெண்களும் அடங்குவர். மேலும், தேர் விழுந்ததில் சாலையோரம் இருந்த வீடுகளும் சேதம் அடைந்தன.

இதையடுத்து, தேரோட்டத்தையொட்டி பாதுகாப்புக்காக வந்த பொலிஸார் மற்றும் தீயணைப்பு படையினர் தேருக்கு அடியில் சிக்கி காயம் அடைந்த பக்தர்களை மீட்டனர்.


இதில் 14 வயது சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்தனர்.

கடந்த ஆண்டும் (2024) இதேபோல் மத்தூரம்மா அம்மன் கோவில் தேரோட்டத்தின்போது, தேர் சாய்ந்து விழுந்து 2 பக்தர்கள் பலியானமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

பொது கழிப்பறையை பயன்படுத்த

# திருநங்கைகளுக்கு தடை



அமெரிக்கா, தெற்கு டகோட்டாவில், ஜூலை 1ஆம் திகதி முதல் பாடசாலைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் திருநங்கைகள் பொது கழிப்பறையைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் புதிய சட்டம் அமுலுக்கு வரவுள்ளது.

அமெரிக்காவில், ட்ரம்ப் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு பல அதிரடி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. முன்னதாக கடந்த ஜனவரியில் அவர் பதவிக்கு வந்ததிலிருந்து திருநங்கைகளின் உரிமைகளைக் குறைக்கும் நோக்கில் தொடர்ச்சியான நிர்வாக உத்தரவுகளில் அவர் கையெழுத்திட்டு வருகிறார்.

அந்தவகையில், அங்குள்ள தெற்கு டகோட்டா மாகாணத்தில் திருநங்கைகளுக்கு இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே இந்த தடையானது வருகிற ஜூலை 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என அம்மாகாண ஆளுநர் லாரி ரோடன் தெரிவித்துள்ளார்.

திருநங்கைகள் அந்த வசதியைப் பயன்படுத்துவதைத் தடுக்க அதிகாரிகள் நியாயமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால், பாடசாலைகள் அல்லது மாநிலத்திற்கு எதிராக அறிவிப்பு மற்றும் தடை உத்தரவு நிவாரணம் பெறவும் இந்த பிரேரணை அனுமதிக்கிறது.

அமெரிக்காவில் இந்த தடையைப் பிறப்பிக்கும் 13ஆவது மாகாணம் இதுவாகும்.

டென்னசி, மொன்டானா மாகாணத்திலும் இந்த பிரேரணை ஆளுநரின் ஒப்புதலுக்காக நிலுவையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர்

போதைப்பொருள் கடத்திய

# இந்தியர்களுக்கு மரண தண்டனை

சிங்கப்பூரில், போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் இந்தியர்கள் மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியர்களான ராஜு முத்துக்குமரன் (வயது38), செல்வதுரை தினகரன் (வயது34), கோவிந்தசாமி விமல்கந்தன் (வயது45) ஆகியோருக்கே, இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்த இவர்கள், கடந்த ஜூலை மாதம் சிங்கப்பூரில் இருந்து இந்தோனேசியாவுக்குப் படகில் போதைப்பொருள் கடத்த முயன்றனர். கரிமுல் என்ற இடத்துக்கு அருகே சென்றபோது மடக்கிப்பிடித்த பொலிஸார், அவர்களிடம் இருந்து 100 கிலோ போதைப்பொருட்களைப் பறிமுதல் செய்துள்ளனர். இதனையடுத்து 3 பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதுதொடர்பான வழக்கு விசாரணையில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு உறுதியானதையடுத்து, மூவருக்கும் மரண தண்டனை விதித்து சிங்கப்பூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



பாகிஸ்தானுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றிய நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் நியூசிலாந்து வென்றதோடு, மூன்றாவதை பாகிஸ்தான் வென்றிருந்த நிலையில் மௌன்ட் மகட்டரேயில் ஞாயிற்றுக்கிழமை(23) நடைபெற்ற நான்காவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை நியூசிலாந்து உறுதி செய்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் சல்மான் அக்ஹா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, பின் அலென்னின் 50 (20), அணித்தலைவர் மிஷெல் பிறேஸ்வெல்லின் ஆட்டமிழக்காத 46 (26), டிம் செய்ஃபேர்ட்டின் 44 (22) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஹரிஸ் றாஃப் 4-0-27-3 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 221 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், வில்லியம் ஓ ரூர்க், ஜேக்கப் டஃபி (4), ஸகரி போக்ஸ் (3), ஜேம்ஸ் நீஷம், இஷ் சோதியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 16.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களையே பெற்று 115 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் அப்துல் சமட் 44 (30) ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியின் நாயகனாக பின் அலென் தெரிவானார்.



# பார்சிலோனா செல்லும் லூயிஸ் டியஸ்?

நடப்பு பருவகால முடிவில் தன்னைக் கைச்சாத்திடுவதற்கான நகர்வொன்றை ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூல் மேற்கொள்ளுமென இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான லூயிஸ் டியஸ் நம்பிக்கையுடனிருப்பதாகக் கூறப்படுகிறது.

லிவர்பூலுடனான 28 வயதான டியஸின் ஆறாண்டு ஒப்பந்தமானது அடுத்தாண்டுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தாவை வீழ்த்திய பெங்களூரு



இந்தியன் பிறீமியர் லீக்கானது (ஐ.பி.எல்), சனிக்கிழமை (22) ஆரம்பித்த நிலையில், கொல்கத்தாவில் நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வென்றது.

ஸ்கோர் விவரம்:


கொல்கத்தா: 174/8 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: அஜின்கியா ரஹானே 56 (31), சுனில் நரைன் 44 (26), அங்கிரிஷ் ரகுவன்ஷி 30 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: குருனால் பாண்டியா 3/29 [4], ஜொஷ் ஹேசில்வூட் 2/22 [4], யஷ் தயால் 1/25 [3], லியம் லிவிங்ஸ்டோன் 0/14 [2])

பெங்களூரு: 177/3 (16.2 ஓவ.)

(துடுப்பாட்டம்: விராட் கோலி ஆ.இ 59 (36), பில் ஸோல்ட் 56 (31), ரஜாட் பட்டிடார் 34 (16), லியம் லிவிங்ஸ்டோன் ஆ.இ 15 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுனில் நரைன் 1/27 [4])

போட்டியின் நாயகன்: குருனால் பாண்டியா.



காயமடைந்த மொஷின் கானை

# லக்னோவில் பிரதியிட்ட ஷர்துல் தாக்கூர்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்.) லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் குழாமில் மொஷின் கானின் பிரதியீடாக ஷர்துல் தாக்கூர் இணைந்துள்ளார்.

நடப்பாண்டு ஐ.பி.எல்லுக்கு முந்தைய ஏலத்தில் எந்த அணியாலும் வாங்கப்படாத தாக்கூர், கடந்த பருவகாலத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடியிருந்தார்.

மொஷின் தவிர மாயங்க் யாதவ், ஆவேஷ் கான், ஆகாஷ் டீப் என லக்னோவின் மற்றைய மூன்று பிரதான வேகப்பந்துவீச்சாளர்களும் பெங்களூருவிலுள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மய்யத்தில் காயத்திலிருந்து மீண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 24, மார்ச் 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.